பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

# தென்னை பயிர்ச்செய்கை சபை

# பதவி வெற்றிடங்கள்

**தென்னை பயிர்ச்செய்கை சபையின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பதவி: உதவிப் பொது முகாமையாளர் (நிதி) IIம் தரம்**
**சேவை நிலையம் : தலைமையகம் - பதவிகள் - 01**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ வனிக விசேட பட்டதாரியாக இருத்தல் மற்றும் முகாமைத்துவ (அயஉெபஉசயை) மட்டத்தில் 03 வருட சம்பந்தப்பட்ட துறையில் சேவை அனுபவம்.

**சம்பள வகுதி: MM 1-3**

**சம்பள அளவு: ரூபா 96,650/- (2,480x10) (3,450x15) – 173,200/-**

01/2025 சுற்று நிருபத்தின் பிரகாரம் சம்பளம் செலுத்தும் விதம்

| 2025ம் ஆண்டிற்கு | 2026ம் ஆண்டிற்கு | 2027ம் ஆண்டிற்கு |
|---|---|---|
| ரூ. 75,143/- | ரூ. 85,896/- | ரூ. 96650/- |

**வயது:** 22 வயதிற்குக் குறையாத மற்றும் 45 இற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான கூடிய வயதெல்லை பொருந்தாது.

**பதவி: பிரதேச முகாமைத்துவம் IIம் தரம்**
**சேவை நிலையம் : சேவையின் தேவைப்பாட்டின் பிரகாரம் நாடளாவிய ரீதியில்**

**பதவி : 01**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமாணி விவசாய விசேட பட்டம்/ விவசாய பட்டம்

**மற்றும்**

பட்டம் பெற்றுக் கொண்ட பின்பு குறித்த பாடத்றையில் மூன்று வருட (03) சேவை அனுபவம்

**சம்பள வகுதி: MM 1-1**

**சம்பள அளவு: ரூபா 91,690/- (2,480x10) (3,450x115)-168,240/-**

01/2025 சுற்று நிருபத்தின் பிரகாரம் சம்பளம் செலுத்தும் விதம்.

| 2025ம் ஆண்டிற்கு | 2026ம் ஆண்டிற்கு | 2027ம் ஆண்டிற்கு |
|---|---|---|
| ரூ. 71,730/- | ரூ. 81,710/- | ரூ. 91,690/- |

**வயது:** 22 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**பதவி: விடயப் பொறுப்பு அதிகாரி (விலங்கு உற்பத்தி) IIம் தரம்**
**சேவை நிலையம் : தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையம்**

**பதவி: 01**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமாணி விலங்கு வேளாண்மையுடன் சம்பந்தப்பட்ட விசேட பட்டம் 1 விலங்கு நிர்வாக விடயத்துடன் விசேடமாகப் பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி விவசாய விசேட பட்டம்.

**அத்துடன்**

அரச/ சபைகள்/ கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் பயிற்சி/கல்வி/ஆய்வு/ செயற்றிட்ட விடயங்கள் பற்றிய ஒரு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள வகுதி: JM 1-2**

**சம்பள அளவு: ரூபா 74,010/- - (1,360x10) (2,040x18)-124,330/-**

01/2025 சுற்று நிருபத்தின் பிரகாரம் சம்பளம் செலுத்தும் விதம்

| 2025ம் ஆண்டிற்கு | 2026ம் ஆண்டிற்கு | 2027ம் ஆண்டிற்கு |
|---|---|---|
| ரூ. 59,552/- | ரூ. 66,781/- | ரூ. 74,010/- |

வயது: 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச / கூட்டுத்தாபன / சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

(மேற்கூறிய பதவிகளுக்கு வாழ்க்கைச் செலவுப் படி 17,800.00 ரூபா உட்பட பதவிக்கு ஏற்புடைய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**ஏனைய நிபந்தனைகள்**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள்**

- இதன் பிரகாரம் 2025-06-13ஆம் திகதியில் இயைபுடைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி அத்தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/ கூட்டுத்தாபன / சபைகளில் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் வீதம் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் 2025-06-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘தலைவர், தென்னை பயிர்ச்செய்கை சபை, இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் உள்ளதாயின் அது குறித்து ஆட்சேர்க்கும் அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். இப்பதவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் இதற்கான தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**தென்னை பயிர்ச்செய்கை சபை,**
**இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**

***மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அதேபோல் அவ்வாறு பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு ஏதேனும் அசௌகரியங்கள் இருக்குமாயின் தம்மாலேயே தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.***

**https://coconutsrilanka.lk/**